This article is published under the Creative Commons CC-BY-ND License
(http://creativecommons.org/licenses/

# Proves of God existence and other methods of Reasoning in Saiva Siddhanta: a Philosophical Study

# சைவ சித்தாந்தத்தில் இறையிருப்பு நிரூபணங்களும் இதரநியாயித்தல் முறைகளும்: ஓர்மெய்யியல் ஆய்வு

**பே.சச்சிதானந்தம், சிரேஷ்ட விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகம் (கலாநிதிப்பட்டஆய்வாளர்).**
**உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்பல்கலைக்கழகம்**
**நா.ஞானக்குமாரன் வாழ்நாள் பேராசிரியர் (மேற்பார்வையாளர்) உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்பல்கலைக்கழகம்**
*Correspondence: sachith72@yahoo.com*
*Submitted: April, 10, 2023 Revised: December, 03, 2024 Accepted: May, 18, 2024*

**Abstract:** As Saiva Siddhanta is the culmination of Saivism, Saiva Siddhanta doctrine has evolved as the pinnacle of the philosophy of Saivism proving the ideology of the triple entities stemming from corporeal basis. This study aims to examine the concept of God (Pathi) which occupies a prominent place in the doctrine of Saiva Siddhanta and the methods of substantiation that are used to prove it from a philosophical perspective. This is an analytical and descriptive study through a survey of scholarly sources. The primary data consist of source texts related to Saiva Siddhanta and the secondary data include commentaries on source texts, supplementary books based on Saiva Siddhanta, and annotations. Although this is a textual and descriptive exploration, it is aimed at uncovering the reasons to prove metaphysical ideology based on data analysis.

Key Words: Existence of God, Metaphysics, Philosophy, Epistemology, Saiva Siddhanta Arguments, Proves..

**ஆய்வுச் சுருக்கம்**

சைவத்தின் முடிந்தமுடிவு சைவசித்தாந்தம் என்பது போல சைவசமயத்தின் முப்பொருள் தத்துவத்தை பௌதிகவதீத அடிப்படையில் நிரூபித்து சைவதத்துவத்தின் முடிந்த முடிவாக வளர்ச்சியடைந்து நிற்பது சைவசித்தாந்த முப்பொருள் தத்துவமாகும். இவ்வாய்வானது சைவசித்தாந்த முப்பொருள் தத்துவத்தில் பிரதான இடம் வகிக்கும் கடவுள்(பதி) பற்றியும் அதனை நிரூபிப்பதற்கு கையாளப்பட்ட நிரூபணமுறைகளையும் சைவ சித்தாந்தம் கூறும் இதர நியாயித்தல் முறைகளையும் மெய்யியல் நோக்கில் ஆராய்வதாக அமைகின்றது. இவ்வாய்வானது பகுப்பாய்வாகவும் இலக்கியமீளாய்வினூடாக அமைந்தஒரு விபரணரீதியான ஆய்வாகவும் அமைகின்றது. இதற்குமுதலாம் நிலைத் தரவுகளாக சைவசித்தாந்த மூலநூல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக மூலநூல்களுக்கு எழுதப்பட்ட உரைநூல்களும் இதர சைவசித்தாந்தம் சார் நூல்களும் வியாக்கியானங்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. அதன்வழி இவ்வாய்வானது நூல்களின் வாயிலாலான பகுப்பாய்வும் விபரண ஆய்வாகவும் அமைந்தாலும் தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் பௌதிக அதீதகருத்தியலை நிரூபிப்பதற்கான ஏதுக்களைவெளிக் கொணருதலை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்: கடவுள்இருப்பு, பௌதிகவதீதவியல், மெய்யியல், அறிவளவையியல், சைவ சித்தாந்தம், வாதம், நிரூபனம்.**

## அறிமுகம்:

மேற்கத்தையமெய்யியல் பரப்பிலே இறையிருப்புநிரூபணங்கள் தனித்துவமாகப் பேசப்படுவது போல சைவசித்தாந்தத்தில் தனியாக இறையிருப்புவாதங்கள் சைவசித்தாந்த ஆசிரியர்களாலோஅல்லதுஉரையாசிரியர்களாலோ நேரடியாக எடுத்துப் பேசப்படாதவிடத்தும், பிற்கால சைவசித்தாந்த உரையாசிரியர்களும்,ஆராய்ச்சியாளர்களும் சைவசித்தாந்தம் இறையிருப்பை நிரூபிப்பதற்கு அவ்வாறானவாதங்களை முன்வைத்துள்ளதுஎன்பதனைஎடுத்துக் காட்டியுள்ளனர். சிவஞானபோதம் சிவஞானசித்தியார். சிவப்பிரகாசம் போன்றநூல்களிலே காணப்படுகின்ற பதியுண்மை பதியிலக்கணம் போன்றகருத்துக்களும், மறைமுகமாக இறையிருப்புவாதங்களுக்கு அணிசேர்ப்பது போல அமைந்திருப்பதே இதற்குகாரணமாகும். அந்தவகையில் பிரபஞ்சவியல்வாதம்,நோக்கக் கொள்கைவாதம்,காரணகாரியவாதம்,உள்பொருள் வாதம்,போன்றனவும் வேறுபல நியாயித்தல் முறைகளும் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாதங்களினூடாக சைவசித்தாந்த இறையிருப்பு நியாயித்தலாக அணுகப்பட முடியும் என்பதே சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர்களின் நம்பிக்கையாகும். அந்தவகையில் அமைந்த இறையிருப்புவாதங்களைநோக்குதல் பயனுடைத்தாகும்.எடுத்துக் காட்டாக சிவஞானபோதத்திற்கான மொழிபெயர்ப்பைச் செய்த ஹென்றி ஆர் கொசிங்டன் (Henry R Hoisington) குறிப்பிடும் பொழுது சிவஞானபோதத்தின் முதலாவது சூத்திரத்தில் உலகம் மூன்று விதமான வகைப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளது அவன் அவள் அது எனச் சுட்டி அறியப்படுவதாகிய இப்பிரபஞ்சம் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்று விதமானமாற்றங்களுக்கு உட்படுபவை. ஆகவேதான் ஞானிகள்

அத்தொழிற்பாடுகளுக்குப் பின்னால் ஒரு இயக்ககாரணரான இறைவன் உள்ளான் எனஒப்புக் கொள்கின்றனர். இதனையே கோல்டன் மத்யு(Godon Mathews). கெபர்ட் ஆதுர்(Herbert Arthur), ஜோன் பியட்( John Piet) நல்லசுவாமிப்பிள்ளை, ரீ.எம்.பி மகாதேவன், தேவசேனாபதி, போன்றோரும்பிரபஞ்ச இயக்கத்திற்குப் பின்னால் அதற்குகாரணமான கடவுள் உண்டுஎன எடுத்துக்காட்டுகின்றார்கள். குறிப்பாக ரீ.எம்.பி மகாதேவன் “சைவ சித்தாந்தத்தின் முதல் சூத்திரம் பிரபஞ்சவியல் வாதத்தை உள்ளடக்கியுள்ளது”( Mahadevan, 1955 ப.15). எனவும், எட்வின் சௌந்தரநாயகம் அன்சலேம், தோமாஸ் அக்குவினாஸ் போன்றோர் பிரபஞ்சவியல்வாதம், காரணகாரியவாதம், நோக்கக் கொள்கைவாதம் என்பனவற்றை முன்வைப்பதற்கு முன்னமே சைவசித்தாந்த ஆசிரியர்கள் அவற்றைதமது சூத்திரங்களின் வாயிலாக எடுத்தாண்டுள்ளனர் (Edwin Savundranayagam,1996 ப.55). என்பதனைக் குறிப்பிடலாம். மேலும் இறையிருப்பை நிரூபிப்பதற்கு சைவசித்தாந்திகள் அளத்தைல் முறைகளையும் காரணகாரியமுறைகளையும் கையாண்டு அவற்றின் வழி இறையிருப்பை நிரூபித்துள்ளனர். எடுத்துக்காட்டாக ஏது எடுத்துக்காட்டு எனும் அளவையியல் முறைகளை சிவஞானசித்தியார் எடுத்தாண்டுள்ளதனையும் அதற்கான உரையாசிரியர்கள் அதனைஎடுத்துக்காட்டி இறையிருப்பைநிறுவுவதனையும் குறிப்பிடலாம்.

1. பிரபஞ்சவியல்வாதமும் இறையிருப்பும்:

சைவசித்தாந்திகள் இறை இருப்பை நிறுவமுன்வைத்த அனுமானப் பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான வாதமே பிரபஞ்சவியல்வாதமாகும். இதற்குள் மூன்றுகருத்துக்கள் உள்ளடக்கப் படுகின்றன.

1. உலகப்படைப்பைஅடிப்படையாகக் கொண்டு படைத்தவன் உளான் எனநிறுவுதல்.
2. நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுநிறுவுதல்.
3. பொருட்களின் குறைவுகளைக் கொண்டுகுறைவில்லாதபூரணப் பொருள் ஒன்று இருக்கவேண்டும் எனநிறுவுதல்.

பிரபஞ்சவியல் வாதத்தின் அடிப்படை குடத்தைக் கொண்டுஅதனைவனைந்தகுயவன் ஒருவன் உளன் என்பதைஅறிவதுபோல காரியப்பிரபஞ்சத்தை கொண்டுஅதனைப் படைத்தவன் ஒருவன் இருக்கவேண்டும் என்பதாகும். இவ்வுலகம் தானாகதோன்றியிருக்கமுடியாது. சித்தாந்திகளின் கருத்துப்படி இவ்வுலகம் அநாதிதொட்டே ஆக்கப்பட்டபடியேஉள்ளதுமல்ல: பானைதானாகவே உற்பத்தியானதும் அல்ல என்று கூறி பானையின் உற்பத்தியின் பின்னால் குயவன் இருப்பதுபோலஉலகஉற்பத்திக்குப்பின்னால் இறைவன் உள்ளான் எனசித்தாந்தம் நிறுவுகின்றது.

மேலும் இப் பிரபஞ்சமானதுபல்வேறுபகுதிகளைக் கொண்டது,அப்பகுதிகளைஎல்லாம் ஒன்றாகச் சேர்த்து அதனை உருவாக்க ஒருவர் வேண்டும். இதற்கு குடையை உதாரணமாககாட்டி விளக்குகின்றனர்.எவ்வாறுஒரு குடை கட்டும் தொழிலாளி,துணி, இரும்புக்கம்பி,தடி ஆகிய பகுதிகளை இணைத்து ஒருகுடையை கட்டுகின்றானோ அதேபோல உலகின் பலபாகங்களையும் இணைத்து உலகை உருவாக்க ஒருவன் வேண்டும் அவனே இறைவன் எனக் கூறும். ஏனெனில் தானாகவே இந்தகுடையினுடையபாகங்கள் ஒன்றாகசேர்ந்து குடையாக முடியாது. ஆகவே இப் பிரபஞ்சத்தை உருவாக்க ஒரு இறைவன் தேவை எனச்சித்தாந்திகள் விளக்குகின்றனர்.

மெய்கண்டாரோசிவஞானபோதத்தின் முதற் சூத்திரத்திலே “அவன் அவள் அதுஎனும் அவை மூவினைமையில் தோன்றியதிதியே ஒடுங்கியமலத்துளதாம்”(ராமநாதபிள்ளை, 1953, ப.37). எனக் கூறி உலகமானது தோன்றிநின்று, அழியக் கூடியது அவ்வாறு இவ்வுலகத்தை செய்வதற்கு ஒருவன் தேவை. அவனின்றி அணுவும் அசையாது என்பது போல அவனே இவ்வுலகை இயக்குகின்றான் எனசித்தாந்தம் கூறும். இதனைசிவஞானசித்தியாரில் :ஒருவனோடு ஒருத்தியொன்னென்றுரைத்திடுமுலகமெல்லாம்.... தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறுமாகி....”எனக்கூறும் ( அறுவர் உரை., 1888, ப.34). இந்த உலகமானது தோன்றி, நிலைத்து, அழிந்துபோகின்ற தன்மையுடையது இச் செயல்களை எல்லாம் செய்கின்ற ஒருவன் அதற்கு வேண்டப்படுகின்றான். அவனே ஆதியும் அந்தமும் அனாதியுமானவன் என இறைவனைக் கூறுகின்றது.

ஆகவே முத்தொழில்களான உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்பதுதானாகவே சுயமாகஉலகில் இடம் பெறுவதில்லை, அவற்றைஎல்லாம் ஒருநியதியின்படிசெய்விக்கின்றஒருவன் இருந்தேஆகவேண்டும் அவனே இறைவன் எனஅனுமானப் பிரமானத்தைஅடிப்படையாகக் கொண்டு இறைஉண்மையைசைவசித்தாந்தம் நிறுவும். இந்த இடத்தில் மீமாம்சகரின் உலகம் குறித்தகருத்தைநோக்கினால்:“உலகம் தோன்றுதலும் இல்லை,அழிதலும் இல்லைஎன்றும் இப்படியேதான் இருக்கும்” (சிவஞானபாடியம், 1936, ப.63). எனக் கூறுவது இவ்வாறு இருக்கின்ற உலகத்தைப்படைக்கவோ, காக்கவோ,அழிக்கவோ ஒருகடவுள் தேவையில்லை எனக் கூறும். ஆனால் உலக இருப்பைமறுக்கும் வேதாந்திகள் கூட அது “ஆகாயத்தாமரைபோலவோ அல்லது முயற்கொம்புபோலவோ இல்லாதது அல்ல”எனஉலகத்தின் இருப்பை ஏற்கின்றனர் (Balasubramanian, 1986, ப.38). இதற்கும் மேலாகசித்தாந்திகள் உலகம் உள்ளபொருள் என்ற அடிப்படையில் அவ்வுலகு உருவாக காரணமான பிரபஞ்சகர்த்தா ஒருவன் உள்ளான் எனக்கூறி உலகப்படைப்புக்கூடாக இறைவனின் இருப்பை நிறுவ முயல்வர்.

ஆனால் சமணர்,பௌத்தர்,போன்றோர் “உலகம் தோன்றியழிவது என்றாலும் அதுதானேஅவ்வாறுஆகும் அதற்கொருதலைவன் வேண்டுவதில்லை” (Balasubramanian, 1986, ப.40). எனக் கூறுவார். இங்குகவனிக்கப்படவேண்டியதுஎன்னவெனில் உலகானது முற்று முழுதாக ஒரே தடவையில் தோன்றி ஒரே தடவையில் அழிவதால் அது ஒருகாலத்தில் இருப்பதும் இன்னு மொருகாலத்தில் இல்லாமல் போவதும் இடம்பெறும். உதாரணமாக கார்காலம் போய் வெயிற் காலம் வந்தால் அவற்றுள் ஒன்றல்ல, இரண்டல்ல அனைத்துமே மெல்லமெல்ல வாடிவதங்கிப் போவதோடு உருவின்றி அழிந்தும் போகின்றன என சிவஞானயோகிகள் கூறுவர் இதனையே.“ஒன்று

ஒன்றின் ஒவ்வொரு கலைவிசேடத்தில் தோன்றி உளதாய் இறக் கண்டும்….எனசிவஞானபோத வெண்பா பகுதிக்குச் சிவஞானயோகிகள் உரைகண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனையே சிவஞானசித்தியார் :“ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் ஒக்கப்….” (இரத்தினசபாபதி,1988 ப.109).

ஆகவே உலகப் பொருள்கள் ஒருகாலத்திலே பலபொருள்கள் ஒருங்கே தோன்றவும் ஒருங்கே அழிந்து போய்விடாது தோன்றுவன தோன்றி, நிற்பனநிற்க, அழிவன அழியவே நிகழ்கின்றதே எனக் கூறும் சித்தாந்தம். அதனால் இவ்வாறான ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களைச் செய்வதற்குஒரு இறைவன் வேண்டும் எனக் கூறுகிறது. தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறுமாகி எனச் சுட்டப்படுகின்றது. இவ்வாறு படைக்கப்பட்டுகாத்து பின் அழிக்கப்படும் உயிர்களும் ஒருநோக்கத்தோடு செயற்படுகின்ற உலகையும் உயிரினங்களையும் படைத்த இறைவன் ஒருகாரணத்தைக் கொண்டே அவற்றை அவ்வாறு படைத்துக்காக்கின்றான். இவ்வுலகை இறைவன் ஆத்மாக்களின் ஈடேற்றத்துக்காகவே படைக்கிறான் அதாவது அநாதிதொட்டே இருக்கின்ற ஆன்மா, மலபந்தங்களில் கட்டுண்டு உழன்று கொண்டிருப்பதனால் அவற்றிலிருந்து விடுபட்டு ஆன்ம ஈடேற்றம் அடையவைக்கின்ற நோக்கத்திலே இறைவன் இவ் உலகத்தைப்படைத்து, காத்து, அழிக்கின்றான். அதேபோலவேஆத்மாக்களும் தங்களது வினைகளிலிருந்து நீங்கி இறைவனை அடையவைப்பதற்காகவே மீண்டும் மீண்டும் உலகில் உடல் எடுத்துப் பிறக்கின்றன. இவ்வாறாகஉலகமும்,ஆத்மாக்களும் நித்தியமாகஉள்ளவையினாலும் இவை ஒருநோக்கத்தோடு இறைவனால் படைக்கப்படுகின்றன பின் அந்தநோக்கத்துக்காகவே இயங்குகின்றன. இவ்வாறாகஉலகத்தையும் உயிரினங்களையும் படைத்துஒருநோக்கத்தில் நெறிப்படுத்துவதற்குஒருவன் தேவை அவனே இறைவன் எனசித்தாந்தம் கூறும். இவ்வாறாகப் பிரபஞ்ச தோற்றம், நிலைபேறு, ஒடுக்க நாசங்களைக் கொண்டே இறைவனை நிறுவிக்காட்டுவது சைவசித்தாந்த இறைநிறுவுதலின் தனிச்சிறப்பாகும். இதனை ஒத்த தன்மையினை தோமஸ் அக்குவனசின் ஐந்துவிதமான இறையிருப்புநிரூபணங்களில் உள்ள பிரபஞ்சவியல்வாதத்திற்கு ஒப்பாக கூறப்படமுடியும்.

**2.ஒழுங்கமைப்புவாதமும் இறையிருப்பும்:**

இப்பிரபஞ்சமானது மிகவும் சிக்கலான பல செயற்பாடுகளைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது. அவ்வாறானசிக்கல் நிறைந்ததொழிற்பாடுகள் தாமாகவே இடம் பெறமுடியாது அது புத்திக்கூர்மையுள்ள ஒருவராலே செயற்படுத்தப்பட முடியும் இதனைச் சைவசித்தாந்தத்தின் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் போன்ற நூல்களினூடாகநாம் கண்டுகொள்ளமுடியும். அவன் அவள், அது எனும் அவயப் பகுப்பையுடைய உலகம் தாமே தோன்றிநின்று அழியாது அவ்வாறு செயற்படுத்த ஒருவர் வேண்டும் அவரே கடவுள் எனக்காட்டும். இதனைச் சிவஞானசித்தியார் ஒருவனோடு ஒருத்தி தருபவர் ஒருவர் வேண்டும் தான்முதல் ஈறுமாகி எனமேலும் தெளிவாகக் கூறும். ஆகவே இப்பிரபஞ்ச இயக்கம் ஒரு நோக்கத்தோடு கடவுளால் வழிநடத்தப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதே சைவசித்தாந்தம் கூறும் ஒழுங்கமைப்புவாதமாகும்.

இறைவனை நிறுவும் சித்தாந்தம் இவ்வுலகில் காணப்படும் பல்வேறு பொருள்களும் ஏதோஒரு குறைபாட்டுடனே இருக்கின்றது. இவ்வாறு குறைபாடு உள்ள பொருட்களிற்கிடையே ஒரு பூரணமான நிறைவான பொருள் இருக்கவேண்டும் அதுவே இறைவன் எனச்சித்தாந்தம் கூறும். சித்தாந்தம் இறைவனை நிறுவ உலகத்தையே கருவியாகக் கொண்டுள்ளது இவ்வுலகமானது பன்மைத்துவமானது அவன், அவள்,அது என அமைவது அவ்வாறான பண்மைத்துவத்தை உடைய உலகத்தை ஒரு ஒழுங்கமைப்புக்குள் கொண்டுவருவதற்கு ஒருஒழுங்கமைப்பாளர்தேவை அவ்வாறு உலகத்தை ஒழுங்கமைத்து ஒருநியதிக்குட்பட்டவகையில் இயக்குபவரே இறைவன் என்று உலக ஒழுங்கைக் கொண்டே இறைவனை நிறுவுகின்றது சித்தாந்தம். உலகப்படைப்பை எடுத்து நோக்கும் போதும் உலகம் மாயையைத் முதற் காரணமாகக் கொண்டும்,சிற்சக்தியைத் துணைக்காரணமாகக் கொண்டும் இறைவனே உலகத்தைப் படைப்பிக்கின்றான் அங்கும் அவர் ஒரு ஒழுங்கமைப் பாளராகவே உள்ளார். உலக ஒழுங்கு, மனிதன், மரங்கள்,பிராணிகள் என்பனவெல்லாம் ஒருஒழுங்கில் இயங்கஒருஒழுங்கமைப்பாளர்வேண்டும் அவரேகடவுள் எனக்கூறும். ஆன்மாக்கள் செய்த கன்மத்திற்கு ஏற்ப பிறவியினை வழங்கவும், அவர்களுக்குரிய கன்மத்தை அவர்களுக்கு வழங்கவும் ஒரு ஒழுங்கமைப்பாளர் தேவை அவரே பதி என்றும் கூறுகின்றது.

**3.உள்பொருளியல்வாதமும் இறையிருப்பும்**

உள்பொருளியல் வாதத்தின் பிரகாரம்கடவுள் ஒருஅதியுயர் இருப்புஎந்த இருப்பைவிட உயர்வான ஒன்றைசிந்திக்க முடியாதோ அதுவே கடவுள். எதனுடைய இருப்பின்மையை ஊகிக்கமுடியாதோ அதுகடவுள். அவ்வாறானகடவுள் பற்றியவாதத்தை முதல் முதலில் கையாண்டவர் அன்சலேம் ஆவார்.(John Piet, 1952, ப.26). இவ்வாதத்தின் படி கடவுள் விடயம் பற்றிய அறிவல்ல ஆனால் அறிவினுடைய உள்ளடக்கம் புரிந்து கொள்ளப்படக் கூடியது அத்தோடு அறியும் மனமும், அறிவும், அறியப்பட்ட அதீதமும் ஒன்றாகவரும். உள்பொருளியல் வாதம் சமயகுரவர்களால் கையாளப்பட்டிருப்பதனைக் காணலாம் இறைவனை அப்பர்தேவாரத்திலே

“அந்திவட்டத்திங்கடகண்ணியன் ஐயாறமர்ந்துவந்தேன் புந்திவட்டத்திடைபுக்குநின்றானையும் பொய் யென்பனோ”( Devesenapathi ,1974, ப.12) .எனது புத்தியில் புகுந்த இறைவனைப் பொய் என்றுசொல்வேனோ. கடவுள் இல்லை என்று சொல்வது சாத்தியமற்றது. இறைவன் எனது புத்தியில் இருக்க அவர் இல்லை என்று பொய் சொல்வேனோ. ஆகவேசீந்தனையில் அதியுயர் இருப்பாக இறைவன் உள்ளான். இதே போல அற்புதத்திருவந்தாதியிலே காரைக்காலம்மையார் தனக்குள்ளே ஒருகேள்ளியைக் கேட்டார் கடவுள் என்னவடிவத்தில் எனதுமனதில் புகுந்துள்ளார் எனக்கேட்டால் நான் என்னவென்று கூறுவது இதற்குஅவரேபதிலாக“நீஎனக்குள் வந்துவிட்டீர்என்றுஎனக்குதெரியும் நான் உன்னைஅன்பினால் பிடித்துநீஎன் இதயத்திலே இருக்கிறீர்” ( ஜகந்நாதன், 1950, ப.12). எனக்கூறுகிறார். இதுவும் இறைவன் ஒருஉயர்வான இருப்புஎன்பதையேவெளிப்படுத்துகின்றது.

உலகம் உள்ளபொருள் அதனைப்பார்த்து அதன் உண்மையில் மெய்ப் பொருள் உண்மையை எடுத்துக் காட்டும் முறையே

அதுவாகும். அதாவது பார்க்கப்படுகின்ற உலகம் பார்க்கப்படுதலின் தன்மை, உலகப்பொருட்களின் தன்மை, நோக்கம் எனவிரிந்து உலகியலை நோக்கிபொருள் முடிவுகளைப் புலன் கடந்தபொருள் முடிவுகளாகவிளக்கும் கொள்கையே சைவசித்தாந்தம் கையாள்கின்றது. பார்க்கப்படுகின்ற உலகம் அவன், அவள்,அது,என்ற பகுப்புக்களை உடையது. பொருள்கள் யாவும் அந்த மூன்று பொதுப் பகுப்புக்களில் இன்னது என்பதாகச் சுட்டி அறியப்படுகின்றன.

உள்ளது என்பதாக பார்க்கப்படுகின்ற பொருட்கள் தோற்றுவிக்கப்பட்ட பொருட்களாயும்,அழியும் பொருட்களாயும், இருக்கின்றன. மக்களில் பார்க்கப்பட்டோரும் அ.ஃறினையில் பார்க்கப்பட்டனவும் கண்முன் தோன்றி இருந்து அழிவனவாய் காணப்பட்டன அவ்வாறே காணப்படுவனவாய் பொருட்களாக இருக்கின்றன என்பதாகப் பார்க்கப்பட்டாலும் பார்க்கப்பட்டதேதோன்றியதுஎன்பதையும் அழிவதுஎன்பதையும் உணர்த்துவதாகிறது. அவ்வகையில் உள்ளதுஎன்பதனாலேயேதோற்றம் இறுதி இரண்டும் மெய்மைபெறுகின்றன.

அவன், அவள்,அது என உள்ளபொருள் தோற்றம் இறுதிஉடையனவாகும் அதனைக் காட்சிஅளவை வழி உறுதி செய்து கருதலளவை வழி உலகப் பொருள்களின் முழுமைக்குமான முடிவாகச் சைவசித்தாந்தம் உலகநோக்கிலேயே விளக்கமுறப்படுகிறது. தோற்றம் இருப்பு,அழிவு மூன்றைக் குறித்தவிளக்கங்களில் புலன் கடந்தபொருள் முடிவுளை உள் பொருள் அமைப்பிலும் நிலைநிறுத்திச் செல்கிறது.

**4. சற்காரியவாதமும் இறையிருப்பும்**

சைவசித்தாந்தம் கடவுளைக் காரணகாரிய அடிப்படையில் விளக்குகின்றது. அதாவது ஒவ்வொரு காரியத்திற்கும் பின்னால் காரணம் உண்டு என்பதாகும். இந்தவகையில் உள்ளபொருளில் இருந்தேஉள்ளதுதோன்றும்,அல்லாததில் இருந்துஉள்ளது தோன்ற முடியாது எனும் சற்காரியவாதத்தின் அடிப்படையிலே சித்தாந்தம் இறைவனை நிறுவுகிறது. இதனை :

“உள்ளது இல்லதாகாது இல்லதுஉள்ளதாகாது
உள்ளதில் இருந்தேஉள்ளதுதோன்றும
இல்லதில் இருந்துஉள்ளதுதோன்றாது என்பதாகும், ( சுப்புரெட்டியா, 2004, ப.38).

இதனைசிவஞானசித்தியார்“ஒருபொருளொருவனின்றிஉளதிலதாகுமென்னில்”...( மெய்கண்ட சாஸ்த்திரங்கள் பதினான்கு, 1994, ப.51).எனக் கூறுகிறது.

இறைவன் உள்ளான் அந்த உள்ளபொருளின் மூலமாகவே இந்தஉலகம் தோற்று விக்கப்படுகிறது. அந்ததோற்றத்திற்கு அதாவது காரியமாகிய உலகத்தோற்றத்திற்கு நிமித்த காரணம் இறைவன். இங்கு நுண்ணிய நிலையில் சூக்குமமாக உள்ள உலகை பருநிலைக்குத்(தூல நிலைக்கு) கொண்டுவருவதற்கு ஒருகர்த்தாதேவை அவரேகடவுள். சித்தாந்தத்தின்படி உள்ளதில் இருந்து உள்ளதுதோன்றும் என்பதற்கு இணங்க இங்கு சிலகாரணங்களை எடுத்துக்காட்டமுடியும் அதாவது பசுக்கன்று, யானைக்குட்டி,முயல்குட்டிஆகிய மூன்றினையும் எடுத்தால் இவை வளர்ந்துவந்த பிற்பாடு பசுக்கன்று பசுவானபின் அதன் தலையில் இருந்து கொம்பும் யானைகுட்டியின் தந்தத்திலிருந்து யானைத் தந்தமும் தோன்றுகின்றது. ஆகையால் முயல் குட்டியின் தலையில் இருந்து கொம்பு உருவாவதில்லை இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் பசு,யானைஎன்பவற்றில் ஏலவே சூக்சுமமாக கொம்பு மறைந்து உள்ளது அது பின் தூலமாக வெளிப்பட முயல் குட்டியிலோ கொம்பு எப்பொழுதும் இல்லாததால் ஒருபொழுதும் அது தோன்றுவதில்லை. ஆகவே உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றுகிறது என்பது கண்கூடு.ஆகவே மாயையாகிய உள்பொருளில் இருந்து உலகம் தோன்றுகின்றதுஎன்பது வெளிப்படை.

மேலும் எள்,எண்ணெய், இரண்டையும் எடுத்துநோக்கினால் எள்ளைப் பிழிந்தால் அதிலிருந்துஎண்ணெய் வருகிறது.அதில் எண்ணெய் சூக்சுமமாக மறைந்துள்ளது.ஆனால் மண்ணெய் பிழிந்தால் எண்ணெய் வருவதில்லைகாரணம் அங்குமண்ணிலேஎண்ணெய் எப்பொழுதும் இருந்ததில்லை,ஆகவே இல்லாததில் இருந்துஉள்ளதுதோன்றமுடியாது.

சித்தாந்தத்தின்படி நுண்ணிய நிலையில் இருந்துஉலகைபடைத்துமீண்டும் அழிக்கின்ற செயற்பாட்டினைச் செய்பவன் இறைவனே இதனைதோற்ற,நிலை,அழிவுஎன்னும் மூன்றுஅடிப்படையில் விளக்குவர்.

தோற்றம் - நுண்ணியநிலையில் இருந்து தூல (காணக்கூடிய) நிலைக்குக் கொண்டுவருதல்

நிலை - தோன்றியதுநிலைத்துநிற்றல்

ஒடுங்குதல் - காணப்படும் நிலையில் இருந்துமீண்டும் நுண்ணிய நிலையைஅடைதல்

இதனை செயற்படுத்துவதற்கு ஒருவர்தேவை அவரே கடவுள் அவர்படைத்து,காத்து,அழித்தல் ஆகியதொழில்களைச் செய்கின்றகர்த்தா. இங்கு இறைவன் உலகினை நுண்ணிய நிலையில் இருந்து தூல நிலைக்கு கொண்டு வருவதை நீலகண்டபாடியத்தில் “சிலந்திப்பூச்சியில் இருந்து நூல் வெளிக் கொணர்வதற்கு ஒப்பாக பேசப்படுவதைச் சுப்பிரமணியம் எடுத்துக்காட்டுவதைக் குறிப்பிடலாம்” (Balasubramanian,1986, ப.110). காரணம் உயிருள்ள ஒருபொருளில் இருந்து உயிரற்ற சடம் தோற்றுவிக்கப்படுவதே மேற்படி உதாரணத்தினால் உணரப்படவேண்டியதாகும்.

சற்காரியவாதின் படிகாரியம் எங்கிருந்தோ தோன்றியதல்ல காரணம் காரியமாக மாறுவதற்கு முன்னதாகவே உள்ளது. உதாரணம் குடம் தோன்றிற்று என்பதனை எடுத்தால் அதுமண் எனும் நிலையில் இருந்துகுடம் எனும் நிலையை அடைந்தது குடம் அழிந்ததுஎன்றால் குடம் என்னும் நிலையில் இருந்துஅதுமீண்டும் மண் என்னும் நிலையை அடைந்தது. சுருக்கமாகக் காரணநிலையில் இருந்துகாரிய நிலையை அடைந்து மீண்டும் காரண நிலையை அடைவதாகும். இதனை மண்ணைக் கொண்டு குடத்தையும், பொன்னைக் கொண்டு ஆபரணங்களையும் உருவாக்க ஒருகர்த்தா வேண்டும். அதாவது மண் தானாக குடமாகாதது போலவும், பொன் தானாக ஆபரணமாகாதது போலவும், இவ்வுலகம் உருவாகமுடியாது எனக்காட்சி அளவையினைக் கண்கூடாகக் கொண்டு சைவசித்தாந்தம் இறை உண்மையை விளக்குகின்றது.

5.இலதென்றலே உளது என்றவாதமும் இறையிருப்பும்

இல்லை என்றுசொல்கையிலே உளது எனும்வாதம் இதனை சிவஞானபோதம் ஆன்மாவை விளக்கவேகையாண்டுள்ளது.இல்லைஎன்பதனூடாகஉண்டுஎனமறைமுகமாகஅறிந்துகொள்கின்றவாதமாகவே இவ்நியாயமுறைகாணப்படுகின்றது. இதனைசிவஞானபோதம் மூன்றாம் சூத்திரம்

"உளது இலதுஎன்றலின்
எனதுடல் என்றலின் ஐம்புலன்…" (மெய்கண்ட சாஸ்த்திரங்கள் பதினான்கு,1994, ப. 51).

இலதுஎன்றலில் ஆன்மாஉளது இல்லையென்கிறஅறிவுடனேசொல்லுகையில் அறிவுயிர் உண்டு. எதுவெல்லாம் ஆன்மா இல்லை என்று மறுத்து அதற்குமப்பாலானதாக ஆன்மாவை சித்தாந்தம் விளக்குகின்றதோஅதேபோலவே இறைவனையும். அது இது என்றுசுட்டிக்காட்டமுடியாதவன் எனக்கூறும்.

மேலும் எவற்றினையும் அன்றன்றெனவிட்டுஆன்மா இலதென்றுநிற்பதுஉளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்கிறது சிவஞானபோதம். இதனை சிவஞானபோதப் பசுபற்றிய சூத்திரத்திற்கு விளக்கம் தரும் பியட் எதிர்மறைக்கூடாக ஆன்மாவை நிறுவும் பண்பு சைவசித்தாந்தத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளவாற்றை எடுத்தாள்கின்றார். (Piet. Jhon H 1952, ப.28). இது இறைவனை அணுகுவதற்கும் பொருந்தும். கிறிஸ்தவ மெய்யியலாளர்கள் கையாளுகின்ற மறுப்புவாதம் (negation)என்பதற்கு ஒப்பானதாகவே இவ்விலதென்றலே உளது எனும் வாதம் கொள்ளப்படலாம்.

**6.ஒழுக்கவியல் வாதமும் இறையிருப்பும்**

சைவசித்தாந்தம் கடவுளை நிறுவுகின்ற வாதங்களில் மிகமுக்கிய இடத்தைப் பெறுவது ஒழுக்கம்சார்வாதமாகும். இவ்வுலகில் இறைவன் ஒவ்வொருஆன்மாவும் செய்கின்றவினைகளுக்கு ஏற்ப அவ்வவ் ஆன்மாக்களுக்கான பிறவியினைகொடுப்பதற்கு ஒருவன் வேண்டும். ஏனெனில் உடல் சடம் போன்றது, ஆன்மா அறியாதது, அறிவிக்க அறிவது. ஒவ்வொருவரினதும் செயல்களும் அல்லதுகருமங்களும் சடம் அல்லது உணர்வற்றவை அவைதாமாகவே வினையைச் செய்தவரைச் சேராது ஆகவே, அறிவில்லாதசடத்தோடு அறிவுள்ள ஆன்மாவைச் சேர்ப்பதற்கு ஒருவர் வேண்டும். அவரே இறைவன். அதனை

"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன் என்றுணர்" (இரத்திணசபாபதி, 1988, ப.218). என்று திருவருட்பயன் கடவுளே வினைப்பயனைக் கொடுக்கும் வல்லமையுள்ளவர் என எடுத்துக்காட்டித் தெளிவாக விளக்குகின்றது. அதன்பிரகாரம் கர்மாவிற்கேற்ப இறைவன் நன்மைதீமையை கொடுப்பவன் எனச்சித்தாந்தம் கூறுவதால் மக்கள் இவ்வுலகவாழ்வில் தீமைசெய்யாது நன்மைசெய்து வாழவேண்டும் என்றசிந்தனை சைவசித்தாந்தம் தனதுகடவுள் கோட்பாட்டிற்கூடாக எடுத்துக்காட்டுகின்றது.

சித்தாந்தத்தின்படி ஆன்மாக்கள் பிறவி எடுப்பதற்கும், துன்பங்களை அனுபவிப்பதற்கும் அவற்றின் கன்மமே காரணம். இங்குகன்மம் சடப்பொருள் அறிவில்லாதது அவ்வாறான அறிவில்லாதபொருள் எவ்வாறு அந்த கன்மத்தைச் செய்தவனை அடைய முடியும், கன்மவினைக்கேற்பவே ஆன்மா, பிறப்பையும், இன்ப துன்பங்களையும் நுகர்கிறது என்றால் அந்தகுறிப்பிட்ட ஆன்மாவை எவ்வாறு அவ்வான்மாவின் கன்மம் சென்றடையும்? ஆகவே ஒவ்வொரு ஆன்மாவும் தனது கன்மங்களுக்கு ஏற்ப கன்மபலனை நுகரச் செய்வதற்கு ஒருசித்துப் பொருள் வேண்டும் அவரே கடவுள். ஆனால் அக்கடவுள் முற்றுணர்வுடையவராயும் தான் கன்மத்தால் பாதிக்கப்படாதவராயிருத்தல் வேண்டும்.ஆகவே,கன்மபலனுக்கு ஏற்பவினைப்பயனை ஆத்மாக்களுக்கு வழங்க இறைவன் வேண்டும் எனக்கூறி சித்தாந்தம் இறைஇருப்பை நிரூபிக்கின்றது. உலக ஒழுங்கைக் கன்மாவின் அடிப்படையில் நிகழ்த்தும் இறைவன் கன்மத்தின் கர்த்தாவாக மெய்கண்டாரால் எடுத்தாளப்பட்டுள்ளார்.

"அவையேதானேயாயிருவினையிற்
போக்குவரவுபுரியவாணயினீக்குமின்றிநிற்குமன்றோ".

(இரத்திணசபாபதி, 1988, ப.19).

இதனையேசிவஞானசித்தியாரும்,

"இருவினையின்பத்துன்பத் திவ்வுயிர்பிறக்கிறந்து வருவதுபோவதாகுமன்னியவினைப் பயன்கள்". (சிவஞானசித்தியார், 1994 ப.1098). எனக் கூறி இறைவனே வினைப் பயனையும் அதற்கு ஏற்பபிறப்பு இறப்பையும் தருகிறான் என்பது தெளிவு. இவ்வாதத்தின்படி இறைவனே கர்மவினைக்கு ஏற்பபிறவிகளைக் கொடுக்கின்றார். மேற்கத்தைய மெய்யிலாளரான இம்மானுவல் காண்ட் போன்றவர்கள் இம்முறையை இறையிருப்பைநிறுவக் கையாண்டுள்ளனர் (Patterson , Charls. H, 1970 Western Philosophy vol -1 ப 76 ).

சைவசித்தாந்தம் இந்நியாய முறைக்கூடாக கடவுளை நிறுவ சிலஎடுத்துக்காட்டுக்களை கையாள்கின்றது. அந்தவகையில் மெய்கண்டார். இறைவனை முதல்வன் என்றும் அவர் அற ஆற்றலாய் நிகழும் இருவினையின் பாற்படுத்தி நடாத்தும் முறையை ஓர் அரசன் செயலுக்கு ஒப்பாகவைத்து கூறுகின்றார். உதாரணமாக அரசன் ஒருவனைச் சிறையில் இட்டுச்சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டுத் திருந்திவருமாறு செய்கின்றான். அங்ஙனம் செய்யும் செயலைத் தானேசெய்யாது சட்டம் இயற்றி அச்சட்டத்தை நிறைவேற்று கின்றவர்கள் எனவும்,சட்டத்தை விளக்குகின்றவர்கள் எனவும், தன் ஆணையின் கீழ்வைத்து உலகத்தை நடத்துவதைப் போலதலைவன் தன் ஆணையை இருவினைகளின் மேல் வைத்துநடத்துகின்றான் இனி இவ்வான்மாக்களுக்கு இருவினைமுதல்வன் ஆணையின் வரும் என்பதனூடாகஅரசர்கள் ஏவலாளர்களை வைத்துதண்டத் தொழில் செய்வது போல இறைவன் இதைச் செய்கிறான். முதல்வன் எல்லாவற்றுக்கும் பரம ஆதாரமாய் இருந்துகொண்டுஉயிர்கள் செய்யும் வினைக்கேற்ப பயனை மாயையின் காரியங்களின் மூலமாகக் கொடுப்பான். செயல் தாமாகவேதமக்குரியபயன்களைக் கொடுக்கமாட்டாஎன்கிறார் இதனைமெய்கண்டார்"வள்ளலவன் செய்பவர்செய்திப் பயன் வினைக்கும் செய்யேபோல் செய்வன் செயல் அனையா" எனக்கூறகின்றார். (Devesenapathi V.A 1974, ப. 93).

வினைகள் அறிவற்றனவாதலினால் அவைதம் பயன்களைஉயிர்களுக்குச் சென்றுகொடுக்கமாட்டா. ஆகவே அதை

உரிய உயிர்களில் சேர்க்கஒருவன் வேண்டும். அவர்அனைத்தையும் அறிபவர் அவராலேயே ஆன்மாக்களின் வினைப்பயனை அறிந்துகொள்ளமுடியும் அதற்கூடாக அவற்றுக்குரிய வினைப்பயன்களை கொடுக்கமுடியும். இங்குகடவுள் பூரண அறிவுள்ளவர்(omniscience) என்பதே எடுத்துக்காட்டப்படுகின்றது. மேலும் மெய்கண்டார் உயிர்கள் தாமே அறிவனவல்ல உடம்பு முதலிய கருவிகளை இறைவன் அவற்றிற்கு கொடுத்த போதுதான் அவை அறிவுவிளங்கப் பெறுகின்றன. அப்பொழுதே அவை நுகர வேண்டிய பயன்களைத் தருதற்குரிய சூழ்நிலைகளை அவற்றிற்கு நினைப்பித்த பொழுதுதான் அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றபடிநாம் விரும்பியதும் விரும்பாததுமானபயன்களைநுகர்கின்றன என்று வினைப்பயனை நுகர்விக்கும் இறைவனை பாரிசேட அளவையைப் பயன்படுத்தி நிறுவுகின்றார். உயிர்,வினை,மாயை,முதல்வன்,என்பன உள்ளபொருட்கள்: இவற்றுள் ஆன்மாக்களுக்கு தாமே அறிவின்மையாலும், வினை சடமாதலாலும், மாயைதாரகத்தன்றானியற்றலெனப் போந்தமையானும் முதல்வனே அறிந்தணைப்பனெனப் பாரிசேடப் பிரமாணங் கூறுவார் (சுப்புரெட்டியார், ந 2004, ப.38). ஆகவே உள்ளபொருட்களில் இறைவன் மாத்திரமே வினைக்கு ஏற்ப பயனைக் கொடுப்பானாதலால் அவனே அனைத்திலும் மேலானஉள்பொருள் என எடுத்துக்காட்டப்படும்.

## 7. இதரவாதமுறைகள்-

சைவசித்தாந்தம் கூறும் இறையிருப்புவாத முறைகளில் அளவைப்பிரமானங்கள், இறையிருப்புவாதங்கள், என்பவற்றுக்குள் தூலாருந்ததி நியாயம், அந்தகஜ நியாயம், சாகபசு நியாயம், மயூரநிர்த்தன நியாயம், கட்டகுடி நியாயம், காகாஸகோள நியாயம் பிரமகீட நியாயம், கந்தோபசுத்த நியாயம், துயதுதுர்ச்சன நியாயம், கைமுதிகநியாயம், அசகளத்தன நியாயம், சாகாசந்திர நியாயம், என்பனவும் இவைதவிரபிட்டபேடணம், கெதானுகெதிகம், தாலீபுலாகம், சூசி கடாகம்,போன்றநியாயமுறைகளும்,முடிவற்றஉண்மைவாதம், முன்னரே நிருமாணிக்கப்பட்ட இசைவுவாதம் போன்ற வாதங்களும் நியாயங்களாக கையாளப்படுகின்றன. (வச்சிரவேலுமுதலியார், 1977 ப 180). இவற்றுள் சிலவற்றை சுருக்கமாக அவற்றினுடைய பொருத்தப்பாடு குறித்து எடுத்து நோக்குவோம்.

### 7.1 தூலாருந்ததிநியாயம்:

தூலம்-பருமை,அருந்ததி- வசிட்டரின் மனைவி,திருமணநிகழ்வின் போதுகணவன் மனைவிக்குகாட்டும் விண்மீன் பருமீனைக்காட்டி பின் அதன் பக்கமுள்ளஅருந்ததிஎன்னும் நுன்மீனைக்காட்டுதல். உதாரணமாகதடத்த இலக்கணம் (பொதுவிலக்கணம்) பதியின் இயல்பினை கூறி அதற்கும்பால் உள்ளபதியின் சிறப்பிலக்கணமானசொரூப இலக்கணத்தைவிளக்குவது இதற்குஒக்கும் (வச்சிரவேலுமுதலியார், 1977 ப 181). இதுவும் சித்தாந்தம் கடவுளை நிறுவ எடுத்துக்காட்டும் நியாயித்தல் முறையாகும்.

### 7.2. அந்தகஜநியாயம்:

அந்த- குருடர்,கஜம்- யானை,யானையைக் கண்டகுருடர்போலஅமைந்திருக்கும். இந்தநியாயத்தில் யானையின் உண்மையியல்பைக் கண்ணால் காண வேண்டும் அவ்வாறுகண்ணால் காணாது பரிசித்து உணரும் உற்றறிவு கொண்டு உணரும் போது அவர் அவர் தொடுகின்ற பகுதிக்கேற்ப யானைக்கு விளக்கம் அளிப்பர். அதுபோலவே முதற்பொருளின் இயல்பைத் திருவருட்கண் பெற்று உணர வேண்டும். அவ்வாறு பெறாது கருதல் அளவை, உரையளவை என்பவற்றைக் கொண்டு அறியும் போது சரியான பூரண அறிவைப் பெறமுடியாது. ஆகவே இறைவனின் திருவருட்கண் கடவுளை அறிந்து கொள்ள இன்றியமையாதது என்பதையே இவ்வாதம் எடுத்துக்காட்டுகின்றது.

### 7.3 சாகபசுநியாயம்:

சாகம்- வெள்ளாடு: பசு-ஆடு, ஆ,எருமை மூன்றிற்கும் பொதுச் சொல். பொதுவாகபலபொருள் குறிக்கும் ஒரு சொல்லைக் கொண்டு அழைக்கும் பண்பு. இதற்கு சிறந்த உதாரணம் பசு என்பதை சத்து என்றும், பிரமம் என்றும், ஆன்மா என்றும்,வேறு சிலவற்றில் நாராயணன் என்றும்,உருத்திரன் என்றும் சிறப்புப் பெயரால் கூறப்படுகின்றது. உபநிடதங்களின் வன்மை மென்மை பற்றி காரணப் பொருளை உருத்திரன் என்றோ நாராயணண் என்றோ துணிந்த பின் சத்து,என்றும்,பிரமம் என்றும்,ஆன்மாஎன்னும் பொதுச் சொற்களும் அங்ஙனம் துணிந்தசிறப்புப் பொருளையேகுறிக்கும் எனக் கொள்ளுதல் இச்சாகபசுநியாயம் ஆகும்.

### 7.4 மயூரநிர்த்தனம்: (மயிற் கூத்தின் முறைமை)

இந் நியாயமுறைபற்றிசிவஞானபாடியத்தன் இரண்டாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (வச்சிரவேலுமுதலியார், 1977 ப 180). மயூரம் - மயில், நிர்த்தனம் கூத்து, இதனால் இம்முறை மயூரநிர்த்தனம் என அழைக்கப்படுகின்றது. மயில் கூத்தாடும் போது ஒருகாலை ஊன்றி ஒருகாலைத் தூக்கிநின்றாடும் இருகால்களையும் ஊன்றாது. அது போலவே உலக நிகழ்ச்சியை விளக்குவதற்கு வினை உண்டு எனக்கொள்ளின் அதுவே அமையும் முதல்வன் இருந்தால் வினையுண்டுஎன்பதுவேண்டா. இரண்டும் உள்ளதுஎனக்கொள்ளுதல் மிகையென்னும் குற்றமாகும் எனத்தடைநிகழ்த்துதல் மயிற்கூத்தின் இயல்பைக் காட்டி கூறும் தடையாகும்.

### 7.5 கட்டக்குடிபிரதாபநியாயம்:(சுற்றிப்போயும் சுங்கத் துறையில் வந்து கூடும் முறை)

கட்டக்குடி என்பது சுங்கத்துறை என்றும்,பிரதாபம் என்பது வந்து கூடுதல் என்றும் பொருள்படும். இதனைசுற்றிப் போயும் சுங்கத்துறையில் கூடும் முறைஎன்றும் கூறுவர். சுங்கம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகவேறு வழிசென்றாலும் சுங்கம் செலுத்தவேண்டியதுறையிலேவந்துசேருதல் போல ஒருகுற்றத்தின் நீங்க எண்ணிச் சில முறைகளைக் கையாண்டு மீள அக்குற்றத்தையே செய்தல். சிவஞானமுனிவர் சிவஞானமாபாடியத்தில் இதனைபயன்படுத்தியுள்ளார்(சிவஞானபாடியம்,1936 ப2).

இறைவனேஉயிர்களுக்குஉடம்புமுதலியவற்றைக் கொடுக்கின்றான் எனக்கூறும் போதுஅவன் பல்வேறுவகையாகசெல்வந்தர்களாகவும்,வறியவர்களாகவும் வித்தியாசமாகஉடலுடன் உயிரைச் சேர்க்கும்போது இறைவன் நடுநிலையானவன் இல்லைஎன்றும் அவனது இயல்பிலேகுற்றம் ஏற்படுகின்றது. அவன் அவற்றின் வினைக்கீடாகபடைக்கின்றான் என்றால் அவன் தன்வயத்தை இழந்துவினைவயத்தால்

செயற்படுகின்றான் என்பதுபெறப்படும். அதுவும் அவனது இயல்புகளுக்குக் களங்கத்தைஏற்படுத்தும் இவ்விதமாகஎல்லாவிதமாகவும் சுற்றிச் சுற்றிபார்க்கின்றபொழுதும் அவனது இயல்புக்குகளங்கம் ஏற்படும் இதுவேசுற்றிப் போயும் சுங்கத்துறையில் வந்து கூடும் முறையாகும்.

### 7.6. அசகளத்தனநியாயம்:

அசம்,அஜம் -ஆடு: களம் -கழுத்துதனம்-தனம் ஆட்டின் கழுத்தில் தொங்கும் முலைபோன்ற இரண்டுகட்டிகள் (வச்சிரவேலுமுதலியார் க,1977 ப 183). அவைமுலைபோன்றன ஆனால் முலைகள் போன்றுபயனளிக்காது காரணகாரியத்தைவிளக்கும் போது காரணம் எனப்படுவது ஆக்கப் பொருள்களில் வியாபித்து நிற்கும் சக்திவடிவில் இருப்பது. ஆகவே சக்தியுடையது காரணத்தன்மை வியாப்தியுடையது காரியத்தன்மை என்றும் ஆட்டின் முலைகாரியத்தன்மை அதனுடைய கழுத்தில் தொங்கும் கட்டிகாரணம் போன்றது ஆட்டின் முலைக்கு ஒப்பானது அதனது கழுத்தில் தொங்கும் கட்டி என்பது காரணகாரியத் தொடர்பை விளக்கி நிற்கின்றது.

### 7.7. சாகாசந்திரநியாயம்:

சாகா என்பது சாகை அல்லது கிளை எனப் பொருள் பெறும(வச்சிரவேலுமுதலியார்,க,(1977) ப183). இந்நியாயித்தல் பொது இயல்பினை உணர்த்தி பின்னர்சிறப்பியல்பை உணர்த்தும் முறையாகும். இதன்படி இரண்டாம் நாள் பிறையை ஒருவருக்கு காட்டவேண்டின் முதலில் அவருக்குபிறையிருக்கும் திசையைக் காட்டிமரத்தின் கிளையைக் காட்டி பின் பிறையைக் காட்டுவர். இதனைபொதுவுணர்வுஉணர்த்தப்பட்டுஅதில் மனம் கொண்ட பின் சிறப்புணர்வுஉணர்த்தப்படுதலாகும். அவ் இலக்கணம் பொதுஇயல்புசிறப்பியல்புஎன இருவகைப்படும். முகிற் படலத்தில் மறைந்துசிறிதேதோன்றும் இரண்டாம் நாள் பிறையைக் காணலுறுவார்க்குநுனிக் கொம்பின் கண்ணதுதிங்களென்றால் பொதுவியல்பு, அதுபற்றிஈண்டு உற்றுநோக்கிய வழிப் பேரொளியாற்றண்ணெற்றகிரணங்களை உடையது திங்களென்பது சிறப்பு. இவையே குறிப்பாக சைவ சித்தாந்தம் கையாளும் சிறப்பியல்பு பொதுவியல்பு என்பனவற்றைக் கொண்டு கடவுள் கோட்பாட்டை நிறுவுவதற்கு சித்தாந்த ஆசிரியர்களால் கையாளப்பட்டது இந் நிரூபண முறைகளாகும்.

### முடிவுரை

ஆகவே சைவசித்தாந்த இறைக்கோட்பாடு என்பது அனுபுதிசார் இறை அனுபவத்துக்குமப்பால் சென்று பிரமாணங்களின் வாயிலாக நியாயித்தலின் வழி அறிவாரய்ச்சியல் ரீதியில் அணுகி நிறுவப்பட்ட ஒன்று என்றால் அதுமிகையாகாது. அதற்கு சைவ சித்தாந்திகள் தர்க்க நிரூபணமுறைகளைக் கையாண்டுள்ளனர் என்பது மேற்போந்த இறையிருப்பு நிரூபனங்களின் வாயிலாகப் புலப்படுகின்றது. அத்தோடு சைவ சித்தாந்திகள் இதர நியாயித்தல் முறைகளையும் அறிவுசார்ந்த அடிப்படையில் தர்க்கரீதியாக எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதும் நிதர்சனமாகின்றது.

### உசாத்துனை:


1. Mahadevan, T.M.P, (1955). The Idea of God in Saiva Siddhanta, Annamalai University.
2. Edwin Savundranayagam. (1996). Structures to Behold.
3. இராமநாதபிள்ளை.ப.,(1953).மெய்கண்டதேவநாயணார் சிவஞானபோதமும் மாதவச் சிவஞானமுனிவரின் சிற்றுரையும்,தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் .
4. அறுவர் உரை., (1888). சிவஞான சித்தியார்.
5. சிவஞானபாடியம், (1936). சைவ சித்தாந்த மகா சமாசம்.
6. Balasubramanian. R, edit (1986/87). Indian Philosophical annual vol 19 அருணைவடிவேல` முதலியார் சி.“சிவஞான பாடியமும் சிவஞான சித்தியாரும்” .
7. இரத்தினசபாபதி,வை,(பர்) (1988). மெய்கண்ட சாத்திரங்கள், சிவஞானசித்தியார் பாடல் 29, சைவசித்தாந்தத் துறை சென்னைப் பல்கலைக்கழகம்,
8. John.H. Piet,(1952). A Logical presentation of the Saiva Siddhanta Philosophy, Christian Literature Society for India.
9. Devasenapathi, V.A., (1974),Saiva Siddhanta as expound in the Sivajana Siddiyar and its six commentaries.
10. ஜகந்நாதன்.கி.வா., (உ-ர்), (1950). பதினோராம் திருமுறை, அற்புதத்திருவந்தாதி, திருப்பானாந்தாள் ஸ்ரீ காசி மடம்,
11. சுப்புரெட்டியார், ந. டாக்டர்,(2004). சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், கழகவெளியீடு.
12. மெய்கண்ட சாஸ்த்திரங்கள் பதினான்கு,(1994).“சிவஞானபோதம்,சைவசித்தாந்தப் பெருமன்றம்,.
13. Balasubramanian. R, (edit) (1986/87). மு.கு.நுா, வையாபுரி. ர. “நீலகண்ட பாடியமும` சிவஞானபாடியமும் ஓர் ஒப்புநோக்கு:
14. மெய்கண்ட சாஸ்த்திரங்கள் பதினான்கு,(1994). “சிவஞானபோதம்,சைவசித்தாந்தப் பெருமன்றம்..
15. John.H. Piet ,(1952). A Logical presentation of the Saiva Siddhanta Philosophy, Christian Literature Society for India.
16. இரத்தினசபாபதி,வை,(பர்) (1988). மெய்கண்ட சாத்திரங்கள், சிவஞானசித்தியார் பாடல் 29, சைவசித்தாந்தத் துறை சென்னைப் பல்கலைக்கழகம்.
17. உமாபதிசிவாசாரியாரின் திருவருட்பயன், (1994). ,சைவசித்தாந்தத்துறை, சென்னைப்பல் கலைக்கழகம், பாடல் 53.
18. இரத்திணசபாபதி, வை,(பர்) (1988). மெய்கண்ட சாஸ்த்திரங்கள் சிவஞானபோதம் பாடல் 2.
19. சிவஞானசித்தியார்,(1994).சித்தாந்தசாத்திரம் பதினான்கு,சைவசித்தாந்தப் பெருமன்றம்.
20. Patterson, Charls.H., (1970). Western Philosophy, vol-1.

21. Devesenapathi V.A. (edit) (1974). Journal of Saiva Siddhanta , Volu.1X, Jayashanmukam N. “Apper’s Argument for the existence of God” Saiva Siddhanta Maha Samajam Madras.
22. சுப்புரெட்டியார் ந. டாக்டர், (2004).சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், கழகவெளியீடு, திருநெல்வேலி.
23. வச்சிரவேலுமுதலியார்,க,(1977). சிவஞானபாடியத் திறவு,.
24. வச்சிரவேலுமுதலியார்,க, (1977). மே.கு.நூ.
25. சிவஞானபாடியம், (1936).சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை.
26. வச்சிரவேலுமுதலியார்,க,(1977). மே.கு.நூ.
27. வச்சிரவேலுமுதலியார்,க,(1977). மே.கு.நூ.